**மத்திய மாகாண அரச சேவையின் தொழில்நுட்ப சேவையில் (சிவில்) தரம் III/ பயிலுநர் தரம் (ஒரு வருட காலப் பயிற்சி) / பயிலுநர் தரம் (இரண்டு வருட காலப் பயிற்சி) ஆகியவற்றிற்காக (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்பு செய்தல் – 2026**

மத்திய மாகாண அரச சேவையின் தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் III (சிவில்) / பயிலுநர் தரம் (சிவில்) (ஒரு வருட கால பயிற்சிக் காலம்) / பயிலுநர் தரம் (சிவில்) (இரண்டு வருட கால பயிற்சிக் காலம்) ஆகிய பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மட்டுப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் மத்திய மாகாண அரச சேவையில், தற்போது பணிபுரியும் தகைமையுடைய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி **2026.10.14** ஆகும்.

1. **பொது தகைமைகள்** : -
   - 1.1 சேவையில் உறுதிப்படுத்தப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
   - 1.2 உரிய திகதிக்கு உடன் முந்தியதாக மத்திய மாகாண அரச சேவையில் நிரந்தர திணைக்களப் பதவியொன்றில் குறைந்தது 05 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். திணைக்களத் தலைவரினால் அதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.
   - 1.3 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கு உட்படாதிருத்தல்
   - 1.4 ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - 1.5 ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான அனைத்து தகைமைகள் மற்றும் நிபந்தனைகளை, **2026.10.14** ஆம் திகதிக்கு எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

2. **கல்வித் தகைமைகள், தொழிற்றகைமைகள் மற்றும் அனுபவங்கள்**: -
   அனைத்து கல்வி மற்றும் தொழில் (தொழில்நுட்ப) தகைமைகளை **2026.10.14** ஆம் திகதிக்குப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| பதவி | கல்வித் தகைமைகள்<br>க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் | தொழில் தகைமைகள் | அனுபவம் |
|---|---|---|---|
| 2.1. மத்திய மாகாண அரச சேவையின் தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III (நேரடி ஆட்சேர்ப்பு) | கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்குத் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் சித்தியடைந்திருத்தல். | I. மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (N.D.T.)<br>அல்லது<br>II. தேசிய தொழில் பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சியளிக்கும் அதிகார சபையினால் (NAITA) வழங்கப்படும் தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா<br>அல்லது<br>III. கல்வி உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா<br>அல்லது | ஆரம்ப மட்டம் அல்லது அதனிலும் மேற்பட்ட சேவைத் தொகுதியில் நிரந்தர திணைக்களப் பதவியொன்றில் உரிய துறையில் குறைந்தது 05 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவம் பெற்றிருத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | IV. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா<br>அல்லது<br>V. இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியலாளர் பரீட்சையில் முதலாம் பகுதியினை பூர்த்தி செய்திருத்தல்<br>அல்லது<br>VI. தொழில் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி மட்டம் (NVQ) 06 இற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்<br>அல்லது<br>VII. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமனானது என்று மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு ஏதேனும் தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்<br>❖ ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிட்டுள்ள மேலேயுள்ள தகைமைகளுக்கு பதிலாக பொ.நி.சுற்று நிரூபம் 46/90 இல் குறிப்பிட்டுள்ள தகைமைகளும் பொருந்தும். | |
| 2.2. மத்திய மாகாண அரச சேவையின் தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிலுநர் தரம் (ஒரு வருட கால பயிற்சிக்காக) | கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்குத் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் சித்தியடைந்திருத்தல். | I. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில், பதவியுடன் தொடர்புடைய துறையொன்றில் பாடநெறியொன்றைச் சிறப்பாகப் பூர்த்தி செய்து தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (NCT) பெற்றிருத்தல். (உ+ம் : தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் - சிவில்)<br>அல்லது<br>II. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் பதவியுடன் தொடர்புடைய துறையில் கைத்தொழில் தொழில்நுட்பத்திற்கான தேசிய சான்றிதழ் பாடநெறியொன்றைச் சிறப்பாகப் பூர்த்தி செய்து சான்றிதழ் (NCIT) பெற்றிருத்தல்.<br>அல்லது | ஆரம்ப மட்டம் அல்லது அதனிலும் மேற்பட்ட சேவைத் தொகுதியில் நிரந்தர திணைக்களப் பதவியொன்றில் உரிய துறையில் குறைந்தது 10 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவம் பெற்றிருத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | | III. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமனானது என்று மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு ஏதேனும் தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.<br>மற்றும்<br>உரிய துறையில் 05 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல் | |
| 2.3. மத்திய மாகாண அரச சேவையின் தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிலுநர் தரம் (இரண்டு வருட கால பயிற்சிக்காக) | கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்குத் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் சித்தியடைந்திருத்தல். | பொருத்தமற்றது | ஆரம்ப மட்டம் அல்லது அதனிலும் மேற்பட்ட சேவைத் தொகுதியில் நிரந்தர திணைக்களப் பதவியொன்றில் உரிய துறையில் குறைந்தது 10 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவை அனுபவம் பெற்றிருத்தல். |

3. **சம்பள அளவுத்திட்டம்** :

3.1 மத்திய மாகாண அரச சேவையின் தொழில்நுட்ப சேவையில் (சிவில்) தரம் III

- 2025.03.25 ஆம் திகதிய பொது நிருவாக சுற்று நிரூபம் 10/2025 இன் MN 03-2025 சம்பளத் தொகுதிற்கமைய, மத்திய மாகாண அரச சேவையின் தொழில்நுட்ப சேவையில் (சிவில்) தரம் III இற்கு உரித்தான சம்பள அளவுத்திட்டம்
  ரூபா. 52,250 – 10X800 – 11X1190 – 10X1320 – 10X1350 – 100,040/- ஆகும்
- இச்சம்பளம் உங்களுக்கு உரித்தாவது 2027.01.01 ஆந் திகதி தொடக்கமாகும்.
- அத்துடன் நியமனம் செல்லுபடியாகும் திகதியிலிருந்து இச்சுற்று நிரூபத்தின் உப அட்டவணை III இற்கமைய சம்பளம் செலுத்தப்படும்.

3.2 மத்திய மாகாண அரச சேவையின் தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிலுநர் தரம்

2025.03.25 ஆம் திகதிய பொது நிருவாக சுற்று நிரூபம் 10/2025 இன்

- பொது நிருவாக சுற்று நிரூபம் 10/2025 (I) இன் இணைப்பு 02 (உப அட்டவணை VI) இற்கமைய

| வருடம் | மாதாந்தக் கொடுப்பனவு | |
|---|---|---|
| | 2026.01.01 ஆம் திகதி முதல் (ரூபா.) | 2027.01.01 ஆம் திகதி முதல் (ரூபா.) |
| 1 வருடம் | 43,274.00 | 45,230.00 |
| 2 வருடங்கள் | 43,730.00 | 45,770.00 |

4. **ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :-**

4.1 மத்திய மாகாண அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், 2016.04.04 ஆந் திகதி கௌரவ ஆளுநரினால் அனுமதிக்கப்பட்ட 2013.06.01 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் மத்திய மாகாண தொழில்நுட்ப சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் நிபந்தனைகளுக்கும் மற்றும் அவ் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள ஏதேனும் திருத்தங்களிற்கும் உட்பட்டு இவ்வாட்சேர்ப்பு செய்யப்படும்.

4.2 நிலவும் வெற்றிடங்களின் 30% ஆனவை மட்டுப்பட்ட ஆட்சேர்ப்பின் அடிப்படையில் நிரப்பப்படும்.

4.3 திறமை ஒழுங்கு வரிசையின்படி வெற்றிடங்களை நிரப்பும் போது யாதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மிகுதியாகவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைவிட அதிகமான எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் சமமான புள்ளிகளைப் பெற்று தகைமைப் பெற்று இருப்பின் மற்றும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான தேவைப்பாடு அச்சந்தர்ப்பத்தில் நிலவுகின்றதெனில், அவ்வாறு சமமான புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளில் இருந்து மேலதிகமாக தெரிவு செய்வது தொடர்பில் தீர்மானம் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ள முடியும். இதன்போது அரச சேவைகள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல. 01/2024 இன் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

4.4 இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதும் ஆகும். தங்களுக்குறிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் இக்கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

4.5 அரசகரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கைகளின் ஏற்புகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்

4.6 முதல் நியமனம் பெறும் சேவை நிலையத்தில் குறைந்தபட்சம் 03 வருட காலம் கட்டாயமாக சேவையாற்ற வேண்டும். ஆனாலும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் விசேடமானதொரு காரணத்துக்காக அக்காலம் முடிவடைவதற்குள் அலுவலரை இடம் மாற்றுவதற்கு அவசியமானால் அதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

4.7 இந்நியமனப் பதவியில் குறைந்தது 05 வருடங்கள் கட்டாயமாக மத்திய மாகாணத்தினுள் சேவையாற்ற வேண்டுவதுடன், அக்காலப்பகுதியில் வேறு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது வேறு பதவிகளுக்கு விடுவிக்கக்கோரியோ மேற்கொள்ளும் எத்தகைய வேண்டுகோள்களும் கவனத்தில்கொள்ளப்படமாட்டாது.

5. **ஆட்சேர்ப்பு முறை:-**

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளுக்கமைய புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் சான்றிதழ்கள் பரீட்சிப்பதற்காக நேர்முகப்பரீட்சையொன்றிற்கு உள்வாங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவர். நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. அத்துடன் எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் தனித்தனியாக குறைந்தது 40% புள்ளிகளைப் பெறாத விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பு செய்வதற்காக கவனத்தில் கொள்ளப்படமாட்டார்கள். பரீட்சையில் காட்டும் திறமையின் அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**5.1 தொழில்நுட்ப சேவையில் (சிவில்) தரம் III, தொழில்நுட்ப சேவையில் (சிவில்) (ஒரு வருட கால பயிற்சி) மற்றும் தொழில்நுட்ப சேவையில் பயிலுநர் தரம் (சிவில்) (இரண்டு வருட கால பயிற்சி) ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான எழுத்துப் பரீட்சை**

| பாடங்கள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற் கான புள்ளிகள் |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலயம் | 100 | 40% |
| விடயம்சார் தொழில்நுட்பவியல் வினாப்பத்திரம் | 03 மணித்தியாலயங்கள் | 100 | 40% |

**5.2 பரீட்சை பாடவிதானம்**

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | இவ்வினாத்தாள் முறன்பாட்டுக்கான தீர்வு, தர்க்க ரீதியியாகச் சிந்திக்கும் ஆற்றல், நேர முகாமைத்துவம் போன்றவை தொடர்பான அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்படும் வினாக்களைக் கொண்டதாகும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இப்பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். |
| தொழில்நுட்பவியல் வினாப்பத்திரம் | துறைசார் தொழில்நுட்ப அறிவினை ஆராயும் நோக்கில் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களையும் அமைப்புக் கட்டுரைகளையும் உள்ளடக்கிய வினாக்களையும் கொண்டதாகும்.<br><br>இங்கு சிவில் உத்தியோகத்தர்கள் கொண்டிருக்க வேண்டிய அறிவினைப் பரீட்சிப்பதற்காக கட்டட நிர்மானம் மற்றும் பராமரிப்பு, வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு, நீர் வழங்கல் மற்றும் வடிகால் முறை சம்பந்தமான வினாக்களைக் கொண்டது. |

5.3 இப்பரீட்சை கண்டி நகரில் நடாத்தப்படும்.

5.4 இப்பரீட்சையினைப் பிற்போடுதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் மத்திய மாகாண அரசசேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

6. **விண்ணப்பிக்கும் முறை:-**

6.1 விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்ததாக இருத்தல் வேண்டும். அதனை ஏ-4 (A4) அளவு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பங்களைத் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்தல் வேண்டும். இலக்கம் 01 முதல் 03 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும், இலக்கம் 04 முதல் 10 வரை இரண்டாம் பக்கத்திலும், ஏனையவை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். பரீட்சை அறிவித்தலில் தரப்பட்ட மாதிரிக்கு பரீட்சார்த்தியினால் முழுமைப்படுதப்பட்ட விண்ணப்பமானது ஒத்திருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத, உரிய திகதிக்கு முன்னதாக பரீட்சைக் கட்டணம் செலுத்தியிறாத, சரியாக பூர்த்தி செய்திறாத, முழுமையற்ற, மற்றும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் பூர்த்தி செய்யாமல் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பிலான இழப்பினை விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை வைத்திருப்பது உசிதமானது.

6.2 விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்து கொள்ளும்போது பரீட்சையின் பெயரினை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

6.3 அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணத்தினை மத்திய மாகாண சபைக்கு செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமான ரூபா 600/- இனை மத்திய மாகாண பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவுவைக்கும் பொருட்டு மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் நீல நிறப் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சைகளுக்காக மாற்றீடு செய்யப்படவும் மாட்டாது.

6.4 இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் “செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி” என்ற முகவரிக்கு **2026.10.14** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் **“மத்திய மாகாண அரச சேவையின் தொழில்நுட்ப சேவையில் (சிவில்) தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் (மட்டுப்படுத்தப்பட்ட) – 2026/ (சிவில்) பயிலுநர் தரத்திற்கு (ஒரு வருடம்) ஆட்சேர்ப்பு செய்தல் (மட்டுப்படுத்தப்பட்ட) – 2026 / (சிவில்) பயிலுநர் தரத்திற்கு (இரு வருடம்) ஆட்சேர்ப்பு செய்தல் (மட்டுப்படுத்தப்பட்ட) – 2026”** எனக் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது. விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி வகிக்கும் பதவி மற்றும் சேவை நிலையம், பரீட்சைத் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொருந்தக்கூடியதாக அமைவதுடன், விண்ணப்பத்தினை அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

6.5 தபாலில் தொலைந்த மற்றும் தாமதமாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்கள் தொடர்பான புகார்கள் குறித்து கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

6.6 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரமாட்டாது

6.7 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி உரிய பற்றுச் சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும்.

6.8 பரீட்சை அனுமதி வழங்கப்பட்டமை தகவுத் திறமையை ஏற்றுக் கொண்டதென அமையாது. விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சையின் போது தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என அறியப்படும் சந்தர்ப்பத்தில், அவரது பரீட்சார்த்தியுரிமை இரத்து செய்யப்படும்.

6.9 விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். அனுமதி அட்டையானது பரீட்சை நடைபெறுவதற்கு 14 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாக அல்லது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள கையடக்க தொலைபேசிக்கு குறுஞ் செய்தி (SMS) மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

6.10 அறிவிப்பு வெளியாகி 04 அல்லது 05 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டும். தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தினதும் காசு செலுத்திய பற்றுச்சீட்டினதும் பிரதிகள், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை சரியாக குறிப்பிட்டு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் காரியாலயத்தின் பரீட்சைப் பிரிவிடம் வினவுதல் வேண்டும்.

6.11 கையொப்பத்தினை சான்றுபடுத்தல்

விண்ணப்பப்படிவத்தில் மற்றும் பரீட்சை அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது, உரிய திணைக்களத் தலைவர் அல்லது அவருக்காக கையொப்பமிடுவதற்கு அதிகாரம் பெற்ற அலுவலரொருவரினால் சான்றுப்படுத்துதல் வேண்டும்.

7. **பரீட்சைக்கான அனுமதி**

7.1 உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, விண்ணப்பப்படிவங்களை முறையாகப் பூர்த்தி செய்து, உரிய தேதிக்கு முன்னதாக அனுப்பிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். இப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பங்களை சான்றுப்படுத்திய அனுமதி அட்டைகளை முதலாவதாகவே பரீட்சைக்குத் தோற்றும் தினத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

7.2 பரீட்சார்த்திகள் தமக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். பரீட்சையினை நடாத்தல் தொடர்பில் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்ட விதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும். விதிகளை மீறினால், மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் நேரிடும்.

8. **ஆள் அடையாளம்** : -

இப்பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்பித்தல் வேண்டும்.

- ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
- செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

9. **பரீட்சை ஊடகம்**

9.1 இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

9.2 ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோறும் அனைத்துப் பாடங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்

9.3 விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

10. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை**

10.1 எந்தவொரு விண்ணப்பதாரரும் இப்பரீட்சை சட்டதிட்டங்களின்படி தகைமையற்றவர் என அறியவருமிடத்து பரீட்சைக்கு முன்னராகவோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னராகவோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

10.2 மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருந்தால் அல்லது யாதேனும் ஒரு தகவலை வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவருக்கு நியமனம் வழங்குதல் தொடர்பில் கவனத்திற் கொளப்படமாட்டாது. அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

11. இப்பரீட்சையில் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களின் பெயர் உள்ளடங்கிய பெறுபேறுகள் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக அறிவிக்கப்படும்

12. இவ்வறிவித்தலில் வெளியாகாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம், இப்பரீட்சையை நிகழ்த்துதல், நிகழ்த்திய பின் தெரிவு செய்தல், தெரிவு செய்யாதிருத்தல், வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய விளக்கமளித்தல், தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவிற்குறியதாகும். மேலும், இந்த அறிவிப்பில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது குறித்து தெளிவுபடுத்துவது / முடிவெடுப்பது மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

13. இவ்வறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்கள் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை இங்கு பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

14. சிங்களம், தமிழ் மொழி அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கே.கே.ஜி.ஐ.டி.பீ. விஜேதிலக,
செயலாளர்
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை

2026 செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244,
கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி